**தலைப்பு 436 – வாகன ஒழுங்குறுத்துகை, பேரூந்து போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வாகன ஒழுங்குறுத்துகை, பேரூந்து போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம அமைச்சிற்கு வழங்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய தொகுப்பு அறிக்கை கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாகன ஒழுங்குறுத்துகை, பேரூந்து போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது

உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை. வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும்

- உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)ஆம் பிரிவு மற்றும் பிரிவு 38 இன் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 காசுப்பாய்ச்சல் கூற்று

அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இல் பரிந்துரைக்கப்பட்ட மாதிரியின் அடிப்படையில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ACA-F இன் பிரகாரம், ரூபா. 12,117,808,226 மீண்டெழும் செலவினத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. மேலும் இதன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் வழங்கப்பட்ட பணத்திற்கு சமமாக இருக்க வேண்டும். ஆனால், | ஒவவொரு செலவினத் தொகைகளுக்கும் இடையே ஏற்படும் வேறுபாடு ரூபா. 12,117,808,226 மற்றும் தொகை ரூபா. 4,471,541,055 என்பவை மீண்டெழும் செலவினங்கள் தொடர்பாக இணக்கம் செய்யப்பட்டு பின்வருமாறு | காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பாக அமைச்சினால் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் தொடர்புடைய பொழிப்பு விரிவான பகுப்பாய்வுகளுடன் |

| | | |
|---|---|---|
| காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா.4,471,541,055 காட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக ரூபா. 7,646,267,171 வேறுபாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. | ACAF இல் காட்டப்பட்டுள்ள மீண்டெழும் செலவினங்கள் ரூபா. 12,117,808,226 ஆனது பின்வருவனவற்றுடன் ஒப்பிடுகிறது, 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை திறைசேரியிடமிருந்த நவம்பரில் மீள திருத்தப்பட்டு அமைச்சின் முழுமையான நிதிச் செயலாற்றல்களை வெளிக்காட்டுகின்றன. | மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சொத்து விடயம் 61111 இன் கீழ் நிலையான சொத்துக்களின் மதிப்பீடுகள் பதிவேட்டில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சிஹாஸ் முறைமையின் கீழ் நிலையான சொத்துப் பதிவேடு உருவாக்கப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் மூலதனச் சொத்து கொள்வனவுகளுக்காக கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துகளின் மதிப்பீடுகள் பதிவேட்டில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | நுகர்வுப் பொருட் பதிவேட்டு புத்தகமொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் இல்லாமையினால் இருப்பு மற்றும் நுகர்பொருட்கள் ஒரே பதிவேட்டில் பராமரிக்கப்பட்டன. இருப்பினும், தற்போது நுகர்வுப் பொருட்களை தனிப் பதிவேட்டில் பேணப்படுகின்றது. | நுகர்வுப்பொருட்கள் இருப்புப் பதிவேட்டில் பேணப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 முகாமைத்துவ செலவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீண்டெழும் செலவினங்கள் | | |
| மீண்டெழும் செலவினத்தின் பதினெட்டு உருப்படிகளின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளில், 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை சேமிக்கப்பட்டுள்ளன. | எதிர்பார்த்த படி பயணச் செலவுகள் ஏற்பட்டிருக்கவில்லை. வாகனத்தினால் எதிர்பார்க்கப்பட்ட பிரதான திருத்தங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கவில்லை. ஊத்தியோகத்தர்கள் இல்லாமையே காரணமாகவுள்ளது. | நிதி ஒழுங்குவிதி 50 இன் அடிப்படையில் மூலதனச் செலவினங்களுக்கான ஏற்பாடுகள் ழுமையாகவும் துல்லியமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) மூலதனச் செலவினங்கள் | | |
| ஏழு மூலதனச் செலவினங்களின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளில், 13 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை சேமிக்கப்பட்டுள்ளது. மேலும், குறிப்பிடப்பட்ட 5 உருப்படிகளின் கீழ் எந்தச் செலவினங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. | அமைச்சரின் அலுவலகத்தைப் பொறுத்தவரை, ஆதனம், பொறி இயந்திரங்கள், உபகரணங்கள், மற்றும் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான தேவைகள் ஏற்பட்டிருக்கவில்லை.ஏனெனில், அதே இராஜாங்க அமைச்சர் ஏற்கனவே அமைச்சரவை அமைச்சின் கீழ் 2019 திசெம்பரிலிருந்து செயற்படுகின்றது. எனவே, 2020 ஆம் ஆண்டின் இறுதியில் நான்கு மாதங்களுக்கு, மேலதிக ஆதனம், பொறி, இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்குவிதி 50 இன் அடிப்படையில் மூலதனச் செலவினங்களுக்கான ஏற்பாடுகள் ழுமையாகவும் துல்லியமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |

**2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு பிரிவினை உருவாக்குவதற்க தேவையான அனைத்த பொறி முறைகள் காணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அத் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை மேவுகை அடிப்படையில் பணியமர்த்துவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுத்துப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்குவிதி மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவினை உருவாக்கப்பட வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 28 ஆகஸ்ட் 2020 திகதியிட்ட பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 பிரிவு 12.3 இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்காக அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் படி படி அது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டமானது போக்குவரத்து அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ளன. | ஒவ்வொரு வருடமும் பொது நிதி சுற்றறிக்கையின் அடிப்படையில் பிரகாரம் ஒரு செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.1.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 28 ஆகஸ்ட் 2020 திகதியிட்ட பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 2/2020 இன் பந்தி 10.2 இன் பிரகாரம், பொது நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இன் கீழ் வழங்கப்பட்ட மாதிரிகளின் படி வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். | வழிகாட்டுதல்களைப் பயன்படுத்தி தற்போது வரைவு செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த அடிப்படையில் பொது நிதியால் வெளியிடப்படும் நிதிச் சுற்றறிக்கையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிகளின் படி வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். |

### 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 02/2020 ஆம் இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு 13.4 இன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிற்கான சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைய பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை அமைச்சிற்கான பிரதான அப்பொழுது போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சரவை அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்குமான பெறுகைத் திட்டமானது 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்டிருந்தன. | பெறுகைகளை வரிசைப்படுத்தும் நோக்கத்திற்காக வருடாந்த அடிப்படையில் பொது நிதியால் வெளியிடப்படுகின்ற பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டமானது தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.3 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்க 30/2016 இன் பிரிவு 3.1 இன் படி, அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களுக்கான எரிபொருள் சோதனை ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், அது தொடர்பாக சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஓதுக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் சோதனையை குறித்த நேரத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் படி ஒவ்வொரு வருடமும் பயன்படுத்தும் வாகனங்களின் உள்ளகக் கட்டுப்பாட்டின் படி எரிபொருள் சோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் முன்னைய அமைச்சிலிருந்து மாற்றப்பட்ட போதிலும், நிதியல்லாத சொத்துக்கள் பதிவேட்டின்படி சொத்துக்களின் பெறுமதி பூசசியமாகக் காட்டப்பட்டுள்ளது. மேலும் அந்த சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்களில் பதிவ செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீட்டு சுற்றறிக்கையின் படி, சொத்து மதிப்பீட்டுதல் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, விரைவில் கணக்குகளுக்குள் எடுத்துக்கொள்ளப்படும். | அனைத்து சொத்துகளின் மதிப்பீட்டு பெறுமதிகள் கணக்குகளுக்கு கொண்டு செல்லப்பட்டு அதன்படி அறிக்கை செய்யப்படுவதை அமைச்சினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது நிர்வாக முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 05/2018 பிரிவு (I) இன் படி, சிறந்த பொது சேவையை வழங்குவதற்காக குடிமக்கள் சாசனம் மற்றும் அதன் கண்காணிப்பு அமைப்புகள் அமைச்சினால் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், அமைச்சினால் அவை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சினால் பதில் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் படி சிறந்த பொது சேவையை வழங்குவதற்கு குடிமக்கள் சாசனம் மற்றும் கண்காணிப்பு அமைப்பு ஆகியவை அமைச்சகத்தால் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். |

## 4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி அமைச்சினால் 2030 இல் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு அடிப்படை நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் பிரதான செயலாற்றல் சுட்டிகள் குறிப்பிடப்பட்டிருந்தன. இலக்குகளை அடைவதற்கும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டில் அமைச்சினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் பிரதான செயலாற்றல் சுட்டிகள் தொடர்பான தீர்மானிக்கப்பட்டு விண்ணப்பிக்கப்பட்டிருந்தன. | 2030 ஆம் நிகழ்ச்சித்திட்டத்தினை அடைந்துகொள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் செயலாற்றல் சுட்டிகளைக் கண்டறிந்து அமுல்படுத்தப்பட வேண்டும். |

## 5 மனித வள முகாமைத்துவம்

### 5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உண்மையான பதவியணி மற்றும் ஆளணியினருக்கான சம்பளக் கொடுப்பனவு

மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சகத்தின் பணிகளைச் செய்ய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை 75 ஆக இருந்தாலும், மீளாய்வாண்டில் அமைச்சகத்தில் உள்ள உண்மையான பணியாளர்களின் எண்ணிக்கை 29 ஆகும். இதன் விளைவாக, மீளாய்வாண்டில் பின்வரும் 46 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கவில்லை.<br>சிரேஷ்ட நிலை – 06<br>மூன்றாம் நிலை – 01<br>இரண்டாம் நிலை – 21<br>ஆரம்ப நிலை – 18<br>46 | அனைத்துப் பதவி வெற்றிடங்களும் நாடாவிய ரீதியான சேவை வழங்கல் வகையை சேர்ந்தவை. நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டிருக்காது அரச சேவை, மாகாண சபைகள், மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அனுமதியினை பெறவேண்டியிருந்தன. இருப்பினும், எங்களால் பல தடவைகள் கோரிக்கையிடப்பட்டத் விளைவாக 40 பட்டதாரி பயிலுனர்கள் ஒதுக்கப்பட்டிருந்தனர். | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினூடாக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இதில் இரண்டு உள்ளக் கணக்காய்வாளர் பதவியணிகள் அங்கீகரிக்கபட்டுள்ள போதிலும் அப்பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதுமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பான தகவல்கள் இணைக்கப்பட்டுள்ளன. | மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினூடாக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை வேண்டும். |